International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# எட்டுத்தொகையில் தமிழர்களின் வேளாண் அறிவு

**பி. பிரதியுஷா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் கரு. முருகன்**
நெறியாளர், இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை மற்றும் உயராய்வு மையம்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை 630 303
(அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, இணைவுப் பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியத்தின் அடித்தளமாக விளங்குவதில் முதன்மையானது சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள் ஆகும். இவற்றுள் எட்டுத்தொகை நூல்கள் பண்டையத் தமிழ் சமூகத்தின் வாழ்வியல், பண்பாடு, பழக்கவழக்கம், அறிவியல் கூறுகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதாய் அமைத்துள்ளன. மேலும், வேளாண்மை, இயற்கை அறிவு, நிலப் பயன்பாடு, சூழலியல் பார்வை ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுகின்றன. மண் சார்ந்த அறிவியல் அறிவும் சிந்தனைகளும் எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறுகின்றன. எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் நிலப் பாகுபாடு, வேளாண் சிந்தனைகள், நில வகைகள் ஆகியவற்றை எடுத்து கூறுவதாய் எட்டுத்தொகையில் தமிழர்களின் வேளாண் அறிவு என்னும் இவ்வாய்வானது அமைகின்றது.

**முதன்மைச் சொற்கள்**

நிலப் பாகுபாடு, வேளாண்மை, வன்புலம், மென்புலம், புன்புலம்

## முன்னுரை

உலக உயிர்கள் வாழ்வதற்கு மண் இன்றியமையாதது. மண்ணின் காரணமாகவே வேளாண் தொழில் தழைத்தோங்கியது. சங்க இலக்கியங்கள் நிலத்தைப் போற்றிச் சிறப்பித்துள்ளன. மேலும் மண்ணியல் குறித்த அறிவியல் கருத்துக்களானது இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. மண் என்பது மக்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாக விளங்குகிறது. உணவு உற்பத்திச் செய்வதற்கும் வாழ்விடங்கள் அமைப்பதற்கும் தொழில் செய்வதற்கும் மண் பயன்படுவதை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. வேளாண் தொழில் மண்ணைச் சார்ந்து மட்டுமே நடைபெறுகிறது.

## நிலப் பாகுபாடு

இயற்கையோடு இயைந்த திணை வாழ்வியலைப் பழந்தமிழர்கள் மேற்கொண்டுள்ளனர். பழந்தமிழர்கள் நிலத்தை அதன் இயல்புக்கு ஏற்றவாறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். நிலத்தை ஐவகையாகப் பகுத்த செய்தியை,

> "குறிஞ்சி பாலை முல்லை மருதம்
> நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே" (அகப்பொருள் விளக்கம்:6)

என்று அகப்பொருள் விளக்கம் நிலப்பிரிவு குறித்து விளக்குகிறது. இதற்கு ஐந்திணை என்று பெயர் வழங்கியுள்ளதும் அறிய முடிகிறது. மேலும் நிலத்தின் இயல்பு குறித்து,

**"வரையே, சுரமே, புறவே, பழனம்,**

**திரையே அவைஅவை சேர்தரும் இடனே**

**என ஈர் ஐவகைத்து அனையியல் நிலமே"**

(அகப்பொருள் விளக்கம்: 9)

என்று குறிஞ்சித் திணை மலையும் மலை சார்ந்த இடமாகவும் முல்லைத்திணை காடும் காடு சார்ந்த இடமாகவும் மருதத்திணை வயலும் வயல் சார்ந்த இடமாகவும் நெய்தல் திணை கடலும் கடல் சார்ந்த இடமாகவும் பாலைத் திணை மணலும் மணல் சார்ந்த இடமாகவும் பிரிக்கப்பட்டுள்ளதை அகப் பொருள் விளக்கம் கூறுகிறது. இதே செய்தியை தொல்காப்பியம்,

**"மாயோன் மேய காடுறை யுலகமும்**

**சேயோன் மேய மைவரை யுலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**

(தொல். பொருள்:5)

என்று தொல்காப்பியத்தின் மூலம் ஐவகை நிலம் குறித்து அறிய முடிகிறது.

இவ்வாறு நிலத்தை அவற்றின் இயல்புக்கு ஏற்றவாறு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பாகுபடுத்தியுள்ளனர். இதன் வழியாகத் தமிழர்களின் நிலப் பாகுபாடு குறித்த அறிவியல் அறிவானது வெளிப்படுகிறது.

**புன்புலம்**

புன்புலம் கடினமான மண் கொண்ட நிலமாகவும் நீர்ப் பாசனம் குறைவானதாக வும் காணப்படுகிறது. கல் கலந்த மண்ணாகவும் கரிமச்சத்து குறைந்ததாகவும் காணப்படுகிறது. நீர்நிலை நீண்ட நேரம் தங்காததால் வறட்சித்தாக்கம் அதிகமாக காணப்படக்கூடியது. அதனால் வறட்சியை தாங்கும் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தைப் புன்செய் நிலம் என்று அழைத்துள்ளனர். புன்செய் நிலம் குறித்து,

**"புன்புலம் வித்தும் வன் கை வினைஞர்**

**சீருடைப் பல் பகடு ஒலிப்பப் பூட்டி,**

**நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்**

**அலங்கு கதிர்த் திரு மணி பெறூஉம்,**

**அகன் கண் வைப்பின் நாடு கிழவோனே"**

(பதிற்.58:15-18)

என்று புன்புலத்தை உழுது பயிரிட்டச் செய்தியை பதிற்றுப்பத்து பாடல் விளக்குகிறது. அதேபோல்,

**"புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக் "**

(குறுந்.202:2)

என்று குறுந்தொகையும்,

**"முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கி,**

**பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்,**

**இடுமுறை நிரம்பி, ஆகுவினைக் கலித்து,**

**பாசிலை அமன்ற பயறுஆ புக்கென"**

(அகம்.262:1-4)

என்று அகநானூற்றுப் பாடலும் புன்செய் நிலத்தை உழுது பண்படுத்தியச் செய்தியைக் குறிப்பிடுகிறது. மழைநீரைச் சார்ந்து பயிரிடக் கூடிய இடமாக விளங்குகிறது. நீர்ப்பாசன முறை குறைவான நிலமாகவும் புன்செய் நிலம் விளங்குகிறது. இங்கு தினை, வரகு முதலியவை விளைவிக்கப்படுகின்றன என்ற செய்தியும் இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

**மென்புலம்**

மென்புல நிலம் மென்மையாகவும் ஈரப்பத முடனும் திகழக்கூடியதுஇது நன்செய் நிலம் என்னும் வகையைச்சார்ந்து காணப்படுகிறது. அதிக நீரை பிடித்துக்கொள்ளும் திறன் வாய்ந்தது. மென்புலம் என்பது நீண்ட காலம் வரை நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தது. உழவுத் தொழிலுக்கு எளிமை யானதாக விளங்குகிறது. மருதத் திணையுடன் தொடர்புடைய நிலமாகக் காணப்படுகிறது. மருதநிலப் பகுதி மென்புலம் என்று அழைக்கப்படுவதை,

**"மென்புலத்து வயல் உழவர்"** (புறம்.395:1)

**"மென்பாலான் உடன் அணைஇ**

**வஞ்சிக்கோட்டு உறங்கு நாரை"**(புறம்.384:1-2)

என்று மென்புலமாகிய மருத நிலத்தில் பயிரிட்ட செய்தியும் நாரை இரை உண்ட செய்தியும் புறப்பாடல் வழி விளக்கப் படுகிறது. மேலும்,

**"மென்புல வைப்பின் நல் நாட்டுப் பொருந"**

(புறம். 42:18)

என்று புறப்பாடல் மென்புலம் குறித்து விளக்குகிறது. நீர் வசதி மிக்க நிலங்கள் மென்புலம் என்று அழைக்கப்படுகின்றன. மென்புலம் என்பது சிறந்த விளைச்சலைத் தரக்கூடியதாக அமைகிறது. இவ்வாறு பழந்தமிழர்கள் ஐவகை நிலங்களைப் பகுப்பு முறையின் அடிப்படையில் மண்ணைப் பிரித்துப் பாகுபாடுச் செய்துள்ளனர். மருதம் மற்றும் நெய்தல் நிலத்தை மென்நிலம் என்றும் குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தை புன்செய் நிலம் என்றும் வழங்கியுள்ளனர்.

**வன்புலம்**

வன்புலம் மிகக் கடினமான கல் மற்றும் பாறை கலந்த மண்ணாகவும் வேளாண் தொழிலுக்கு சிரமமானதாகவும் விளங்குகிறது. நீர் தங்காத வளம் குறைந்த நிலமாகவும் காணப்படுகிறது. நீர் சேமிப்புத் திறன் மிகக் குறைவு என்பதால் வறட்சி நிலை அதிகமாக விளங்குகிறது. பெரும்பாலும் மேய்ச்சல் நிலமாகக் காணப்படுகிறது. குறைந்த நீர் தேவையுள்ள பயிர்கள் மட்டுமே பயிரிடப் படுகின்றன. முல்லை நிலம் வன்புலமாக விளங்கிய செய்தியை,

**"வன்புலத்து பகடுவிட்டு"** (புறம்.395:2)

என்று புறப்பாடலின் வழி அறிய முடிகிறது. வன்புல நிலத்தில் எருதுகளை மேய்த்த செய்தியானது அறிய முடிகிறது. இதேபோல் வன்புலமாகிய முல்லை நிலத்தில் வரகு விளைந்த செய்தியை,

**வன்பாலான் கருங்கால் வரகின்** (புறம்.384:4)

என்று புறப்பாடலும்

**"வன் புலக் காட்டு நட்டதுவே"** (நற்.59:6)

என்று நற்றிணையும் வன்புலம் சூழ்ந்த நாடு என்று முல்லை நிலத்தை குறிப்பிடுகிறது.

பரல் கற்களைக் கொண்ட வளனற்ற காடானது வன்னிலம் என்று அழைக்கப்பட்ட செய்தியை,

**"பரல் முரம்பு ஆகிய பயம் இல், கானம்**

**இறப்ப எண்ணுதிர் ஆயின்"** (அகம்.5:15 )

என்று அகநானூறு குறிப்பிடுகிறது. வன்புலம் சிரமமாக விளங்கினாலும் வேளாண்மைக்குப் பயன்படுத்தியச் செய்தி இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

**முடிவுரை**

வேளாண் தொழிலுக்கு முக்கிய ஆதாரமாக திகழக்கூடியது மண் ஆகும். வெவ்வேறு பகுதிகளில் பல்வேறு வகைகளில் மண் கிடைக்கிறது. மண்ணின் வளம் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை வைத்து மென்புலம், வன்புலம், புன்புலம் என்று வகைப்படுத்தி யுள்ளனர். வளமான மருத நிலம் மென்புலம் என்றும் கடினமான முல்லை குறிஞ்சி நிலம் புன்புலம் என்றும் உலர்நிலம் வன்புலம் என்றும் வழங்கப்படுகிறது. இவ்வாறு நிலத்தினை அதன் தன்மைக்கேற்ப ஐவகையாகப் பிரித்து அதன் இயல்பிற்கு ஏற்ப வன்புலம், மென்புலம், புன்புலம் என்று வகைப்படுத்தியுள்ளனர். இதன்மூலம் பழந் தமிழர்களின் வேளாண் அறிவு அறிய முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

1. ஆலிஸ்.அ, பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டெட், அம்பத்தூர், சென்னை, 2004
2. சுதமதி. இரா, அகப்பொருள் விளக்கம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 - பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டெட், அம்பத்தூர், சென்னை, 2012
3. தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியருரையும், கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007
4. செயபால். இரா,அகநானூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டெட், அம்பத்தூர், சென்னை, 2004
5. நாகராசன். வி,குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டெட், அம்பத்தூர், சென்னை,2004
6. பாலசுப்பிரமணியன்.கு.வெ, நற்றினை (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ்(பி)லிட்,41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டெட், அம்பத்தூர், சென்னை, 2004
7. பாலசுப்பிரமணியன்-கு.வெ-புறநானூறு (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,41 பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டெட், அம்பத்தூர், சென்னை, 2004